**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 155 of 2024

DATE :24.03.2026

Depositions of witness for Prosecution

PW:10

| | | | |
|---|---|---|---|
| Name | மருத்துவர் பாலசுப்பிரமணியன் | Caste | |
| Father/Husband's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of March 2026

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திருமதி முத்துக்கனி ஆஜர்)

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது ராஜபாளையம் சக்தி பாலா தனியார் மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.03.2022 அன்று சுமார் 21.30 மணிக்கு முத்து ராஜா என்பவர் காயங்களுடன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதனை செய்ததில் கீழ்கண்ட காயங்கள் அவருக்கு காணப்பட்டன. (1) வலது பக்க தலையில் 7X1 CM அளவில் தோல் கிழிந்த அளவில் காயம் காணப்பட்டது. அத்துடன் வலது கண் பட்டையில் எலும்பு முறிவு இருந்தது. (2) இடது புஜங்கை பகுதியில் 8X1 CM அளவில் தோல் கிழிந்த காயம் காணப்பட்டது. அத்துடன் சுண்டு விரலுக்கு செல்லும் தசை நார் வெட்டுப்பட்டு காணப்பட்டது. (3) 2 வது காயத்தில் அல்நார் எலும்பின் ஒரு பக்கம் உடைந்து காணப்பட்டது. அவருக்கு மேலே சொன்ன காயங்களுக்காக அறுவை சிகிச்சை 18.03.2022 அன்று செய்யப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் விபத்து பதிவேற்றுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான். **விபத்து பதிவேற்றுடன் கூடிய காயச் சான்று அ.சா. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

காயம்பட்ட நபர் எத்தனை மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் என்றால் கடந்த 17.03.2022 அன்று இரவு 09.30 மணிக்கு மருத்துவனைக்கு வந்திருந்தார். அவர் வழக்கு சம்பவம் நடைபெற்ற நேரம் குறித்து எதுவும் சொன்னாரா என்றால் சொன்னார். என்னுடைய விசாரணையின் பொழுது வழக்கு சம்பவம் 17.03.2022 அன்று இரவு சுமார் 07.00 மணிக்கு நடைபெற்றதாக கூறினார். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு